செ.வெ.எண். 853 பத்திரிகைச் செய்தி நாள் 02.10.2010

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
## குறளகம், சென்னை—108

## அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா
## குறளகம் காதிகிராப்டில் கதர் சிறப்பு விற்பனை துவக்க விழா

## EACH ONE BUY ONE CAMPAIGN

அண்ணல் காந்தியடிகள் 142—வது பிறந்த நாள் விழாவினை (02.10.2010) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மிகவும் சிறப்பாக கொண்டாடி வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வளர்ச்சிப் பணிகள் பன்மடங்கு அதிகரித்து வந்துள்ளன. உற்பத்தி, விற்பனை, வேலைவாய்ப்பு அளித்தல் ஆகிய திட்டங்களை திறம்பட செயல்படுத்துதல் ஆகியவற்றில் இவ்வாரியம் சிறப்பான முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. நிர்வாகக் கூட்டமைப்பிலும், திட்டங்களை திறமையாக செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இந்தியாவில் மற்ற வாரியங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது.

இத்தீபாவளி பண்டிகை மற்றும் இதர விழாக்காலங்களை முன்னிட்டு வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் புத்தம் புதிய வடிவமைப்பில் பல நவீனரக 100 சதவீதம் அசல் பட்டு சரிகை புடவைகளும், கதர் பருத்தி, பாலியஸ்டர், பட்டு, வெள்ளை மற்றும் கலர் வேஸ்டிகள், துண்டுகள் ஆயத்த ஆடைகள் கலர் மற்றும் வெள்ளை சட்டைகள் பல வண்ண போர்வைகள் மெத்தை விரிப்புகள், மெத்தை மற்றும் தலையணைகள், மற்றும் எம்பிராய்டரி புடவைகள், வெஜிடபிள் டை சார்ட்டிங், ஜெல் கோட்டிங், ஜெல் கோட்டிங் (உடன்) எம்பிராய்டரிங் புடவை, சனால் எம்பிரடாய்ரி புடவை, கலம் புடவைகள், ஐதராபாத் டிசைன் புடவைகள், போச்சம்பள்ளி மற்றும் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட உற்பத்தியாகும் பட்டு புடவை வகைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அனைத்து தரப்பினர் மற்றும் அலுவலக பணியாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.2,000/— முதல் ரூ.25,000/— வரை மதிப்பிலான பட்டுப் புடவைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இப்பட்டுப் புடவைகள் அனைத்தும் தரமுள்ள பட்டினால் செய்யப்பட்டவை என்பதை நுகர்வோர் எளிதாக அடையாளம் கண்டிட உதவும் பொருட்டு மத்திய பட்டு வாரியம் வழங்கியுள்ள "சில்க் மார்க்" லேபிள்கள் ஒட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தரமான பட்டுப் புடவைகளை உற்பத்தி செய்கிறது என்பதற்கு இதுவே சான்றாகும். இவ்வாண்டு ரூ.21.00 கோடிக்கு கதர் இரகங்கள் விற்பனை செய்யவும் மற்றும் ரூ.40.00 கோடிக்கு கிராமப் பொருட்கள் விற்பனை செய்யவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காந்தியடிகளின் ஆசிபெற்ற கதர் துணியின் விற்பனையில் பெரும்பகுதி அதனை உற்பத்தி செய்யும் கிராமப்புற ஏழை மக்களை மேம்படுத்த பேருதவி புரிகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே பொது மக்கள் அனைவரும் தீப திருநாளாம் தீபாவளி, பக்ரீத், கிருஸ்மஸ், பொங்கல் பண்டிகைகளுக்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கியுள்ள கீழ்கண்ட சிறப்பு தள்ளுபடியை பயன்படுத்தி அதிக அளவில் கதர் இரகங்களை வாங்கி இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் வாழ்வு வளம் பெற உதவிடுமாறு இவ்வாரியம் கேட்டுக் கொள்கிறது.

| | |
|---|---|
| கதர் இரகங்கள் | 30 % |
| பாலியஸ்டர் இரகங்கள் | 30 % |
| **உல்லன் இரகங்கள்** | **20 %** |

**<u>பட்டு இரகங்கள்</u>**

| | |
|---|---|
| ரொக்கம் | 20 % |
| கடன் | 19 % |

இக் கதர் கிராமத் தொழில் வாரியம் 50ம் ஆண்டு பொன் விழா ஆண்டில் "ஒவ்வொருவரும் ஒரு கதர் ஆடை வாங்குவோம். கதர் தொழிலை ஊக்குவிப்போம்" "EACH ONE BUY ONE" என்பதன் அடிப்படையில் **மாண்புமிகு கதர் துறை அமைச்சர் திரு. கா. இராமச்சந்திரன்** அவர்கள் கதர் சிறப்பு விற்பனை மற்றும் நடமாடும் விற்பனை ஊர்தியினை கொடி அசைத்து சிறப்பு பிரசாரத்தை தொடங்கி வைத்தார்கள். கதர் மற்றும் கிராமப் புற தொழில்களில் சிறந்து விளங்கிய கைவினைஞர்களுக்கு பரிசு மற்றும் கேடயம் வழங்கி கௌரவித்தார்கள். இவ்விழாவிற்கு தமிழ்நாடு அரசு கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையின் **முதன்மைச் செயலர் திரு. ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப** அவர்கள் தலைமை வகித்தும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய **கௌரவச் செயலர் திரு. லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப (ஓய்வு),** அவர்கள் முன்னிலை வகித்தார்கள். இவ்வாரிய **தலைமை செயல் அலுவலர் முனைவர். சாந்தினி கபூர், இ.ஆ.ப,** அவர்களின் அறிவுரையின்படி இவ்விழா இனிதே நடைபெற்றன. மேலும் வாரிய அலுவலர்கள், பணியாளர்கள், பொது மக்கள், பத்திரிக்கை மற்றும் தொலைகாட்சி நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9